இந்தியா பிஸ்டன்ஸ், லூகாஸ்—டி.வி.எஸ்., பெஸ்ட் அண்டு கம்பெனி, பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சுந்தாம் கிளேடன் ஹிந்துஸ்தான் பெரடோஸ் போன்ற நிறுவனங்களிலிருந்து பல்வேறு பாகங்கள் வாங்கப்படுகின்றன. பாகங்கள் (உதிரி உறுப்புகள்) சரிவரக் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் இம்போர்ட்–ரெஸ்டிரிக்ஷன், வெளிநாட்டுச் செலாவணி பெறுவதில் இருக்கும் கஷ்டம், மூலப்பொருள்கள் கிடைக்காமல் இருப்பது (ஸ்கேர்ஸிடி ஆப் ரா மெடீரியல்ஸ்) லேபர் அன்ரெஸ்ட் இவைகள் தான் காரணங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக அண்மையில் நடந்த சிம்சன் கலவரத்தால் கூட அரசாங்கப் போக்குவரத்துத்துறை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, பல பெரிய பேருந்து நிறுவனங்கள் அவர்களுக்கு வேண்டிய சில உதிரி உறுப்புகளைத் தாங்களாகவே தயார் செய்து கொள்கிற முறையைப் பார்க்கிறோம். அதேபோல் அரசு பேருந்து நிறுவனமும், அதற்குத் தேவையான உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒரு பஸ்ஸுக்கு கிட்டத்தட்ட 7,500 உறுப்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாமே செய்வது என்பது முடியாத காரியம். ஆனால் கூடுமானவரையில் இவற்றைச் செய்கிற நிறுவனங்கள் சென்னையைச் சுற்றி இருப்பதால் அவைகளைப் பெறுவதற்கான முறையை மேற்கொள்கிறோம். இங்கே இருக்கிற நிறுவனங்களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு விட்டால் இன்னும் விரைவாக வாங்குவதற்கு எந்தெந்த நிறுவனங்கள் இத்தகைய உறுப்புகளை உற்பத்தி செய்கின்றன என்று பார்த்து, அவைகள் தரமானவைகளா என்று பார்ப்பதற்காக ஒரு டிரையல் ஆர்டர் கேட்கலாமா என்ற அளவில் அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

Suggestions for improving bus routes

* 689 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the suggestions sent by various associations in the City of Madras to improve or to change or to start new routes are attended to by the Director of Transport; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பல்லவா போக்குவரத்துக் கழகம் ஏற்படுமுன் அக்கருத்துரைகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநரால் கவனிக்கப்பட்டன. தற்போது கழகம் கருத்துரைகளைக் கவனிக்கிறது ;

(ஆ) இது குறித்துப் பல கருத்துரைகள் பெறப்பட்டன எனவே, அவற்றின் விவரங்களைத் தருவது இயலாததாகும்; ஆனால் பெறப்பட்ட ஒவ்வொரு கருத்துரையும் ஆய்வு செய்யப்படுகின்றது. ஏற்புடைய இடங்களிலெல்லாம் அவை செயல் படுத்தப்படுகின்றன.

Dr. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister whether it is possible for the Government to step up peak hour traffic ? Whether Government have received applications from persons regarding peak hour and whether Government have any programme in that respect and if so, what are the steps taken ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நெரிசல் நேரங்களில் அதிகப் பேருந்துகள் விடவேண்டுமென்று பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாநகரத்தில் உள்ள பெரும் வழித் தடங்களில், ஷட்டில் சர்வீஸ் விடப்பட்டிருக்கின்றன. 62 ஷட்டில் சர்வீஸ்கள் தொடங்கப் பட்டிருக்கின்றன.

Dr. H. V. HANDE : Sir, may I know whether these shuttle buses are able to collect enough passengers and if so, whether it is possible for the Government to increase these shuttle buses ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த ஷட்டில் சர்வீஸ் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று தான் அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது. அதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இப்போது சேசிஸ் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட அதை நன்கு அறிவார்கள். 2 மாத காலமாக அசோக் லேலண்டில் சேசிஸ் உற்பத்தி செய்யவில்லை. உற்பத்தி தொடங்கப்பட்டு தேவையான அளவுக்கு சேசிஸ் தருவார்களானால், அதை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

Dr. H. V. HANDE : May I know whether a number of buses which the Government have withdrawn are not in good condition, and there are a number of complaints from the public that several of the buses that are introduced are old and therefore they experience discomfort and have the Government any programme to replace these uneconomical, old, dilapidated buses and introduce new buses ?

The Hon. Thiru S. RAMACHANDRAN : Sir, information regarding replacement can be had on the day the Transport Demand is discussed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]